அவசரம் /தேர்வுகள் உடனடி கவனம்

**அனுப்புநர்**

தண்.வசுந்தராதேவி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் /
இணை இயக்குநர் (கல்வி),
புதுச்சேரி.

**ந.க.எண். 242170 /எப்1/2018** **நாள்.27.03.2019**

ஐயா/அம்மையீர்,

**பொருள் :** மேல்நிலை முதலாமாண்டு (+1) மற்றும் இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வுகள், மார்ச் 2019 – பள்ளி மாணாக்கர் பெயர்ப்பட்டியல் – திருத்தங்கள் மேற்கொள்ள இறுதி வாய்ப்பு வழங்குதல் – சார்பு.

**பார்வை :** இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதங்கள், நாள்.18.01.2019, 24.01.2019 மற்றும் 09.02.2019.

-----

மார்ச் 2019, மேல்நிலை முதலாமாண்டு (+1) மற்றும் இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வுகளுக்கான பெயர்ப் பட்டியல்களில் திருத்தங்களை மேற்கொள்ள அரசுத் தேர்வுத் துறையால் பலமுறை வாய்ப்பளிக்கப்பட்டது. பெயர்ப்பட்டியல் தயாரிக்க போதுமான கால அவகாசமும், திருத்தங்கள் மேற்கொள்ள பல வாய்ப்புகளும் அளிக்கப்பட்ட நிலையிலும் கூட, சில பள்ளிகளின் பெயர்ப்பட்டியல்களில் பிழைத் திருத்தம் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை என்பது, தற்போது வரையிலும் பெயர்ப் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்ளக்கோரி சில பள்ளிகளிலிருந்து இவ்வலுவலகத்தில் பெறப்படும் கடிதங்கள் வாயிலாக தெரிய வருகிறது.

எனவே, மாணவர்களின் நலன் கருதி, அனைத்து மேல்நிலைப் பள்ளிகளுக்கும், மார்ச் 2019, மேல்நிலை முதலாமாண்டு (+1) மற்றும் இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வுகளுக்கான பெயர்ப் பட்டியல்களில் திருத்தங்கள் மேற்கொள்ள இறுதியாக ஒரு வாய்ப்பு பள்ளிகளுக்கு தற்போது வழங்கப்படுகிறது.

பள்ளித் தலைமையாசிரியர்கள், மார்ச் 2019, மேல்நிலை முதலாமாண்டு (+1) மற்றும் இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வுகளுக்கான பெயர்ப் பட்டியல்களில் **தேர்வர்களது தலைப்பெழுத்து, பெயர் (ஆங்கிலம் / தமிழ்), பிறந்த தேதி, புகைப்படம், பள்ளியின் பெயர்** ஆகியவற்றில் மட்டும் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்களின் விவரங்களை, தனித்தனியே பட்டியலிட்டு சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடம் **29.03.2019 –**க்குள் ஒப்படைக்க வேண்டும். பள்ளியின் பெயரில் High School என்பதை HSS or Higher Secondary School என மாற்றம் செய்ய வேண்டும் எனில், அதனையும் மாற்றம் செய்ய தற்போது வாய்ப்பு வழங்கப்படுகிறது.

மாணாக்கரின் பெயர்ப்பட்டியலில் திருத்தம் மேற்கொள்ளக்கோரி ஏற்கனவே முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கோ அல்லது அரசுத் தேர்வுகள் இயக்ககத்திற்கோ கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி இருப்பினும், தற்போது அத்திருத்தங்களை பட்டியலிட்டு மேற்குறிப்பிட்டவாறு சம்மந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

மொழிப்பாடம், பயிற்று மொழி மற்றும் பாடத் தொகுப்பில் திருத்தம் செய்ய வேண்டி இருப்பின் அவ்விவரத்தினை தனியே பட்டியலிட்டு முதன்மைக் கல்வி அலுவலர் வாயிலாக திரு.ச.சீனிவாசன், துணை இயக்குநர் (மேல்நிலை) (பொறுப்பு), அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006 என்ற முகவரிக்கு 03.04.2019–க்குள் பதிவஞ்சல் / துரிதஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்க வேண்டும்.

முதன்மைக் கல்வி அலுவலர்கள் வருகிற **29.03.2019 பிற்பகல் முதல் 03.04.2019 வரையிலான** நாட்களில் அரசுத் தேர்வுத் துறை இணையதளத்தில் தங்களுக்கான User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி, தங்களது ஆளுகைக்குட்பட்ட மேல்நிலை பள்ளிகளிலிருந்து பெறப்படுகின்ற மார்ச் 2019, மேல்நிலை முதலாமாண்டு (+1) மற்றும் இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வுகளுக்கான பெயர்ப் பட்டியல்களில் **தேர்வர்களது தலைப்பெழுத்து, பெயர், (ஆங்கிலம் / தமிழ்) பிறந்த தேதி, பயிற்று மொழி, பள்ளியின் பெயர்** ஆகியவற்றில் உள்ள திருத்தங்களை பதிவேற்றம் செய்திட வேண்டும்.

தேர்வர்களது நலன் கருதி, பிழைகளற்ற மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கிட ஏதுவாக, மார்ச் 2019, மேல்நிலை முதலாமாண்டு (+1) மற்றும் இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வுகளுக்கான பெயர்ப் பட்டியல் மற்றும் பள்ளியின் பெயரில் திருத்தங்கள் மேற்கொள்ள இறுதியாக இவ்வாய்ப்பு வழங்கப்படுகிறது.

எனவே, அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளிகளுக்கு இப்பொருள் குறித்து விரைந்து சுற்றறிக்கை அனுப்புமாறும், **இப்பணிக்கு அதிமுக்கியத்துவம் அளித்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்** கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–

**இயக்குநர்**

நகல்

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

– தகவலுக்காகவும், தக்க நடவடிக்கை மேற்கொள்வதற்காகவும் நகல் அனுப்பப்படுகிறது.